# இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி - 2011

## 1. அபிப்பிராயம்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் நிலைவரம் மற்றும் அத்திகதியில் உள்ளவாறான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2. கணக்காய்வு முக்கியத்துவ விடயங்கள்

### 2.1 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அவிசாவளை வீடமைப்பு செயற்திட்டமானது ஐந்தொகையில் ஏனைய சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இ.க.நி 38 இன்படி, இந்த சொத்துக்களை விற்பனை செய்வதாக முகாமைத்துவத்தின் முடிவு இருந்தது. சொத்துக்களானது விற்பனை செய்வதற்காக கொண்டுள்ள தொகையிலும் குறைவாக மற்றும் விற்பனைக் கிரயத்தைக் கழித்த நியாயமான பெறுமதி என்பவற்றில் மதிப்பிட்டு பிரமாணம் வகைப்படுத்த வேண்டும். வகைப்படுத்தலின் பின்னர், சொத்துக்களானது ஐந்தொகையின் முகப்பில் பிறம்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், வங்கியானது இந்த கணக்கீட்டு நியமத்துடன் இணங்குவதற்கு தவறியிருந்தது.

(ஆ) இ.க.நி-16 இன் 26 ஆம் பந்தியின்படி ஒரேசீரான இடைவெளிகளில் (குறைந்தது ஒவ்வொரு மூன்று ஆண்டுகளிற்கு ஒருமுறை பொருத்தமானது) கணிப்பீட்டு மதிப்பீடுகளைப் பெறுவதன் மூலம் ஓய்வூதிய நன்மையினை நிர்ணயிப்பதற்கு வங்கியானது தவறியிருந்தது.

## 2.1.2 பெறவேண்டிய கணக்குகள்

வங்கியால் 2011 இலிருந்து ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எதிராக கடன்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 திசெமபர் 31 இல் உள்ளவாறான 5,835 கணக்காளர்களின் மொத்த செயற்பாடற்ற கடன் மீதிகள் ரூபா 147,581,129 கூட்டுமொத்தத் தொாகை ஆகும். ஏதாவது ஊழியர் சேமலாப நிதிய மீதிகளால் பிணையாக வைக்கப்பட்ட செயற்பாடற்ற கடன் நிலுவை இலங்கை மத்திய வங்கியிடமிருந்து கோரப்பட வேண்டும். எவ்வாறாயினும் மீதிகள் 12 மாதங்கள் முதல் 42 மாதங்கள் வீச்செல்லை கொண்ட காலமாக நிலுவையாக இருந்த போதிலும் வங்கியானது வருடாந்தம் அத்தகைய நிலுவையாகவிருக்கின்ற மீதிகளை கோருவதற்கு தவறியிருந்தது.

## 2.1.3. கணக்காய்விற்கான சான்றுகளின்மை

வங்கியானது கணக்காய்விற்காக விசேட ஒதுக்க கணக்கு தொடர்பான ரூபா 3,451,125 தொகையான இரண்டு நாளேட்டுப் பதிவுகள் தொடர்பான விபரங்களை வழங்குவதற்கு தவறியிருந்தது.

## 2.1.4 சர்சசைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியானது நிதிக் கொடுக்கல் வாங்கலின் தாக்கம் இல்லாமல் ஒரு தனியார் நிறுவனத்தினூடாக ஊழியர் பங்குத் தெரிவுத் திட்டத்தின் கீழ் பங்கு மூலதனம் மற்றும் ஏனைய சொத்துக்களை ரூபா 49,838,646 ஆல் அதிகரித்திருந்தது. ஏனைய சொத்துக்கள் தனியார் நிறுவனம் ஒன்றின் கீழ்இது கணக்கிடப்படடிருந்தது. இதன் விளைவாக வங்கியானது மேற்குறிப்பிட்ட பங்கு மூலதனத்தின் மீது செலுத்தப்பட்ட பங்கிலாபம் தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு ரூபா 870,608 ஆன பங்கிலாப வரி செலுத்தியிருந்தது.

(ஆ) திறைசேரி செயலாளரால் வழங்கப்பட்ட 2010 திசெம்பர் 30 ஆந் திகதிய பீஈ/சீஓஎம்சீ/பீஎவ்/01 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின்படி, அரச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் அவர்களுடை எதிர்கால விளப்பரப்படுத்தல் செலவினங்களை செய்வதற்கு முன்னர் நிதி அமைச்சரிற்கு அதன் திட்டத்தினை சமர்ப்பிப்பதன் மூலம் முன்னங்கீகாரம்

பெறப்படவேண்டும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வங்கியால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரம் 2011 ஆம் ஆண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் தனியார் கம்பனிக்கு விளம்பரச் செலவினமாக ரூபா 4,239,200 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) பின்வரும் நிபந்தனைகளிற்கு உட்பட்டு 2011 இன் இறுதி ஆறு மாதங்களிற்காக 2011 யூலை 28 இல் ரூபா 12 மில்லியன் செலவழிப்பதற்கு பணிப்பாளர் சபையிடமிருந்து அங்கிகாரம் பெறப்பட்டிருந்தது.

- ரூபா 1,000 மில்லியனால் சேமிப்புகள் அதிகரித்தல்
- ரூபா 3,000 மில்லியனால் கடன்கள் அதிகரித்தல்

எவ்வாறாயினும், மேற்குறித்த நிபந்தனைகள் விளப்பர பிரசாரத்தின் ஊடாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு.

| | **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | **2011 யூன் 30 உள்ளவாறு** | **முன்னேற்றம் (6 மாதங்களாக)** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| சேமிப்புகள் | 1,544,965,604 | 1,249,363,948 | 295,601,656 |
| கடன்கள் | 14,714,665,721 | 13,682,536,275 | 1,032,129,446 |

(இ) (i) வங்கியானது 2011 ஆம் ஆண்டிற்கான புதுவருட பரிசுகள் வழங்குவதற்காக கோப்பி செற் மற்றும் விசிலடிக்கும் கேத்தல்கள் என்பவற்றைக் என்பன கொள்வனவு செய்திருந்தது. வங்கியால் ஆகக் குறைந்தது மூன்று கேள்விகளுக்குப் பதிலாக ஒரேயொரு கேள்வியை கோருவதன் மூலம் அத்தகைய பரிசுப் பொருள் விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டதென கணக்காய்வு தெரிவுச் செவ்வையில் வெளிப்பட்டது.

(ii) பரிசுப் பொருள் விடயங்கள் கொள்வனவு செய்யவதற்கான பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின்படி, வங்கியானது வங்கிக்கான அதிகரிக்கும் நலனின் ஆகக் கூடிய எல்லையை விஞ்சியிருக்கக்கூடாது. ஆனால், வங்கியானது ரீ- சேட்களை கொள்வனவு செய்யும் போது அந்த வேண்டுகையுடன் இணங்குவதற்கு தவறியிருந்தது. வங்கிக்கு அதிகரிக்கும் நட்டம் ஒவ்வொரு ரீ- சேட்டிற்கும் ரூபா 118.50 ஆக இருந்தது. வங்கிக்கு மொத்த அதிகரிக்கும் நட்டம் 4,020 ரீ- சேட்டுகளிற்காக ரூபா 476,370 ஆக இருந்தது.

மேலும், 2012 சனவரி 01 ஆம் திகதிய கணக்காய்வு பரிசோதனையில் உள்ளவாறு பரிசுப் பொருள் விடயங்களின் பின்வரும் மீதிகள் அவதானிக்கப்பட்டன. ஆகவே இந்த ஊக்குவிப்புப் பிரசாரத்தின் வெற்றியளிப்பு ஐயத்திற்குரியதாக உள்ளது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| | **கோப்பிகிகள் குவளை** | **சுவர் மணிக்கூடு** | **குடைகள்** | **விசில் கேத்தல்கள்** | **ரீ- சேட்கள்** |
|---|---|---|---|---|---|
| கொள்வனவு செய்யப்பட்ட பரிசுப் பொருள் விடயங்கள் | 1,000 | 2,698 | 2,800 | 1,500 | 4,020 |
| 2012 சனவரி 1 இல் உள்ளவாறு மீதி | 298 | 2,185 | 2,081 | 977 | 2,815 |

(ஈ) வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது 2011 பெப்ரவரி 03 இல் இணையதள வங்கியியல் தீர்வு முறைமையை பெறுவதற்தாக 2011 பெப்ரவரி 03 தனியார் கம்பனி ஒன்றிற்கு முற்பணமாக ரூபா 1,121,387 ஐ செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும் சொல்லப்பட்ட முறைமை வாடிக்கையாளர்களிற்கு திறக்கப்பட்டிருக்காததுடன் 2011 செப்தெம்பர் 30 இல் உத்தியோகத்தர்களிற்கு மாத்திரம் திறக்கப்பட்டிருந்தது. உத்தியோகத்தர்களினால் இணையதள வங்கியியல் தீர்வு முறைமையின் பயன்பாடு ரூபா 366,300 ஆன வருடாந்த பராமரிப்புச் செலவினத்துடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவாக உள்ளது.

### 2.1.5 முதலீடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 4,008,448,456 தொகையான முதலீடுகளிற்கான கேள்வி கோரல் தொடர்பான ஆவணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்காததுடன் ஆகவே சிறந்த வட்டி வீதங்களை வங்கியால் பெறப்பட்டிருந்தனவா என்பது கேள்விக்குரியதாகும்.

(ii) வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது மதிப்பிடுதல் மற்றும் சிறந்த முதலீட்டுத் தீர்மானங்களை எடுப்பதற்கான நோக்கத்திற்கான பிரதான முகாமையாளரின் தலைமையில் தனியான திறைசேரி பிரிவு ஒன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும் வங்கியானது மூன்றாவது பகுதியுடாக வியாபார பத்திரங்களில் முதலீடு செய்திருந்தது. மூன்றாவது தரப்பினர்கள் ஊடாக முதலீட்டு முடிவுகள் எடுக்கப்பட்டிருந்தமையால் திறைசேரிப் பிரிவின் செயலாற்றல் கேள்விக்குரியதாகும் என அவதானிக்கப்பட்டது.

(iii) வங்கியானது 2011 ஒக்தோபர் 13 இல் வியாபார பத்திரத்தில் ரூபா 150 மில்லியனை முதலீடு செய்திருந்தது. எவவாறாயினும், வியாபார பத்திரத்தின் முகப்பில் முதலீட்டாளரின் பெயர் ஒரு தனியார் கம்பனியின் பெயராக உள்ளதுடன் பிடித்து வைத்தல் வரிச் சான்றிதழும் (டபிள்யூஎச்ரீ) அதே பெயரில் வழங்கப்பட்டிருந்தது. ஆகவே வங்கியால் டபிள்யூஎச்ரீ நலனைக் கோரும் சாத்தியத்தன்மை கேள்விக்குரியதாக உள்ளதுடன் வியாபார பத்திரத்தின் உரிமையாண்மையும் கேள்விக்குரியதாக உள்ளது.

### 2.1.6 கடன்கள் மற்றும் முற்பணங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியில் தற்போது வேலை செய்யாத ஊழியர் தொடர்பில் 2011 செப்தெம்பர் 5 இல் உள்ளவாறு ரூபா 3,580,978 தொகை நிலுவையாக இருக்கின்ற மூன்று கடன்களை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்பாடற்ற கடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்த மோசடியான ஆவணங்கள் ஊடாக வங்கியால் வழங்கப்பட்ட ரூபா 1.8 மில்லியன் தொகையான கடன் மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் வங்கி உதவியாளர் அவருடைய சொந்தப்பணம் ஒரு ரூபாவை (ரூபா 1.00) வைப்பிலிடுவதன் மூலம் கடன் கணக்கை மூடியிருந்ததொன அவதானிகப்பட்டது.

### 2.1.7 முகாமைத்துவ திறமையீனங்கள்

வங்கியானது 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிச் சந்யையிலிருந்து ரூபா 1,164,156,085 ஆன கடன் பெற்றிருந்தது. எவ்வாறாயினும் வங்கியானது கடன் பெற்ற வீதங்களுடன் ஒப்பிடும் போது குறைவான வட்டி வீதங்களுடன் நிலையான வைப்புக்களில் ரூபா 1,275,000,000 ஐ வைப்புச் செய்திருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றது.

| கடன்பெறல் | தொகை | வீதம் | முதலீடுகள் | தொகை | வீதம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | % | | ரூபா | % |
| தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 93,351,752 | 15.50 | பிரதேசிய சங்வர்த்தன வங்கி | 425,000,000 | 9.10 |
| எச்எண்பீ வங்கி கடன் | 125,011,000 | 11.77 | பிரதேசிய சங்வர்த்தன வங்கி | 350,000,000 | 9.57 |
| சம்பத் வங்கி | 449,960,000 | 12.02 | பிரதேசிய சங்வர்த்தன வங்கி | 150,000,000 | 10.00 |
| இலங்கை வங்கி | 495,833,333 | 12.77 | அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 350,000,000 | 9.00 |
| | 1,164,156,085 | | | 1,275,000,000 | |

## 3 நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் செயற்பாடுகள் விளைவித்திருந்த வரிக்கு முந்திய இலாபம் ரூபா 414.3 மில்லியனை முன்னைய ஆண்டிற்கான நேரொத்த வரிக்கு முந்திய இலாபமான ரூபா 188.9 மில்லியனுடன் ஒப்பிடுகையில் வரிக்கு முந்திய இலாபத்தில் ரூபா 225.4 மில்லியனான அதிகாரிப்பைக் காட்டுகிறது.

### 3.2 செயற்பாட்டு விளைவுகளின் பொழிப்பு

2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதிசார் விளைவுகளின் பொழிப்பு முன்னைய மூன்று ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு பொழிப்பாக கீழே தரப்படுகின்றது.

| விடயம் | 2011 (ரூபா 000) | அதிகரிப்பு/ (குறைவு) ரூபா.மில் | 2010 (ரூபா.மில்) | அதிகரிப்பு/ (குறைவு) ரூபா.மில் | 2009 (ரூபா .மில்) | அதிகரிப்பு/ (குறைவு) ரூபா.மில் | 2008 (ரூபா .மில்) | அதிகரிப்பு/ (குறைவு) ரூபா.மில் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வட்டி வருமானம் | 2,250 | 85 | 2,165 | 51 | 2,216 | 275 | 1,941 | 245 |
| வட்டிச் செலவினம் | 1,353 | 15 | 1,339 | (243) | 1,582 | (20) | 1,602 | 355 |
| தெறிய வட்டி வருமானம் | 897 | 70 | 826 | 192 | 634 | 295 | 339 | (110) |
| வட்டியல்லாத வருமானம் | 126 | 40 | 85 | 33 | 52 | 19 | 33 | (13) |
| தேறிய வருமானம் | 1,023 | 110 | 911 | 225 | 686 | 314 | 372 | (123) |
| வட்டியல்லாத செலவினம் | 603 | 90 | 513 | 74 | 439 | 54 | 385 | 26 |
| நட்டக் கடனுக்கான ஏற்பாடு (கடன் நட்டம்) | (79) | 186 | 107 | 28 | 79 | 25 | 54 | 11 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| செயற்பாட்டு இலாபம் / (நட்டம்) | 495 | 204 | 291 | 123 | 168 | 235 | (67) | 160 |

வட்டி வருமானம் மற்றும் வட்டிச் செலவினம் முறையே 3.92 சதவீதம் மற்றும் 1.1 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம், வட்டியல்லாச் செலவினம் முன்யை ஆண்டுடன் ஒப்பிடும் போது 17.54 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 3.3. குறிப்பிடத்தக்க விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுக்கான வங்கியின் சில முக்கிய விகிதங்கள் பின்வருமாறு உள்ளன.

| குறிகாட்டி | 2011 % | 2010 % |
|---|---|---|
| **இலாபத்தன்மை** | | |
| (i) தேறிய இலாப விகிதம் | 13.04 | 6.01 |
| (ii) மொத்த இலாப விகிதம் | 37.71 | 36.69 |
| (iii) வட்டி வருமானத்திற்கு வட்டிக் கிரயம் | 60.20 | 61.86 |
| (iv) மொத்த இலாபத்திற்கு மேந்தலைச் செலவினம் | 67.39 | 62.13 |
| (v) சராசரிச் சொத்துக்களில் வருவாய் | 1.77 | 0.91 |
| (iv) உரிமை மூலதன வருவாய் | 15.58 | 7.58 |
| **மூலதன போதியதன்மை** | | |
| (i) ஒரு பங்கிற்கான உழைப்பு | 47.85 | 20.91 |
| (ii) உரிமை மூலதனம் : மொத்த சொத்துக்கள் | 1:9 | 1:8 |
| (iii) உரிமை மூலதனம் : கடனபெறல் | 1:1.6 | 1:2 |
| (iv) தட்டு I | 21.34 | 21.09 |
| (v) தட்டு II | 21.95 | 22.18 |
| **திரவச் சொத்துக்கள்** | | |
| திரவச் சொத்து விகிதம் (ஆகக் குறைந்தது 20 சதவீதம்) | 21.15 | 21.09 |

## 3.4 வங்கியின் முதிர்வின் தொகுதி

மாதாந்த மட்டத்தில் வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் தொகுதியின் பகுப்பாய்வு மொத்தப் பொறுப்புக்கள் அதிகளவு விஞ்சியிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 3 மாதங்கள் 3-12 மாதங்கள், மற்றும் 1-3 ஆண்டுகள் வரையான குறுகியகால திரவ இடைவெளிகளில் முறையே ரூபா 3,034 மில்லியன், ரூபா 2,550 மில்லியன் மற்றும் ரூபா 496 மில்லியன் என்பனவாக இருந்ததென்பதை வெளிப்படுத்தியது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 0-3 மாதங்கள் | 3-12 மாதங்கள் | 1-3 ஆண்டுகள் | 3-5 ஆண்டுகள் | 5 ஆண்டு களிற்கு மேல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| காசு | 91,605 | - | - | - | - | 91,605 |
| வங்கிகளிடமிருந்து பெறவேண்டியவை | 107,492 | - | - | - | - | 107,492 |
| முதலீடுகள் | 547,512 | 3,179,446 | - | - | 33,798 | 3,760,756 |
| கடன் முற்பணங்கள் | 709,026 | 974,284 | 3,059,509 | 2,752,779 | 7,142,250 | 14,637,848 |
| நிலையான சொத்துக்கள் | - | - | - | - | 763,249 | 763,249 |
| ஏனைய சொத்துக்கள் | 35,895 | 67,014 | 26,447 | 8,749 | 198,668 | 336,773 |
| மொத்த சொத்துக்கள் | 1,491,530 | 4,220,744 | 3,085,956 | 2,761,528 | 8,137,966 | 19,697,724 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| மொத்த மூலதன நிதி | - | - | - | - | 2,125,084 | 2,125,084 |
| வைப்புக்கள் | 3,957,724 | 6,019,808 | 1,938,591 | 166,447 | 253,446 | 12,336,016 |
| கடன் பெறல் | 182,003 | 383,219 | 909,671 | 834,686 | 1,246,288 | 3,555,867 |
| ஏனைய பொறுப்புக்கள் | 385,969 | 367,473 | 733,770 | 28,976 | 164,569 | 1,680,757 |
| மொத்த பொறுப்புக்கள் | 4,525,696 | 6,770,500 | 3,582,033 | 1,030,109 | 3,789,386 | 19,697,724 |
| முதிர்வு இடைவெளி | (3,034,166) | (2,549,756) | (496,077) | 1,731,419 | 4,348,580 | - |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியின் மொத்த வாடிக்கையாளர் நிலையான வைப்பக்களில் 63 சதவீதத்திற்கும் அதிகமானவை 20

வாடிக்கையாளர்களுக்கு உடமையாக உள்ளதுடன் இது வங்கியின் திரவத்தன்மை மற்றும் தொடர்ந்தியங்கும் தன்மையைப் பாரதூரமாகப் பாதிக்கும்.

(ii) இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது பிராந்திய அபிவிருத்தி வங்கியில் ரூபா 925 மில்லியனை முதலீடு செய்திருந்ததுடன் அதே வங்கியிடமிருந்து நியைான வைப்பாக ரூபா 1,734 மில்லியன் பெற்றிருந்தமையால் ஈடுபடுத்தப்பட்ட வைப்புக்களின் தேறிய தொகை ரூபா 809 மில்லியனாக விளைந்திருந்தது. இதன்படி, வங்கியினுடைய முதலீட்டு தொகுதி ஒன்று மற்றையதில் தங்கியிருப்பதால் இரண்டு வங்கிகளும் ஆபத்தில் இருந்தன.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட நலிவுகள் காலத்திற்குக்காலம் வங்கியின் பொது முகாமையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கொள்வனவுகள்

(ஆ) நிலையான சொத்துக்கள், பொருளிருப்புப் பதிவேடுகள் மற்றும் களஞ்சிய முகாமைத்துவம்

(இ) கடன் நிர்வாகம்

(ஈ) பிரசாரம் மற்றும் மேம்பாட்டுச் செலவினங்கள்

(உ) பயிற்சி நிகழ்ச்சிதிட்டங்கள் மற்றும் செயலமர்வுகள்

(ஊ) சுவீகரிக்கப்பட்ட சொத்துக்களின் விற்பனை

(எ) கிளைகளிலுள்ள விடுமுறைப் பதிவேடுகளின் பராமரிப்பு

(ஏ) அதே கிளையில் 5 ஆண்டுகளிற்கு மேல் சேவையாற்றும் உத்தியோகத்தர்களிற்கிடையிலான சுழற்சி

(ஐ) முதலீடுகள்

(ஒ) நிலையான வைப்புக்கள்